**திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்றக் கூடத்தில் 10–01–2019 வியாழக் கிழமை மாலை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டட அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.சே. நாகராஜன், எம்.ஏ.,**

**தனி அலுவலர்,**

**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 47718/ 2013/UGSS-2 நாள்.27.12.2018 தேதி வரப்பெற்ற கூட்ட அறிவிப்பு கடிதத்தின் பேரில் இந்நகராட்சியில் வடபாதி ஆற்றங்கரை தெருவில் உள்ள புதிய உரக்கிடங்கு வளாகத்தில் 19 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு மற்றும் கழிவு நீர் மேலாண்மை மையம் அமைக்க பரிந்துரை செய்யப்பட்டு வரப்பெற்ற கடிதத்தின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 07.01.2019 தேதி அன்று நடைப்பெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு 10 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு மற்றும் கழிவு நீர் மேலாண்மை மையம் அமைப்பதற்கு தெரிவிக்கப்பட்டதன்பேரில் மதிப்பீடு ரூ.185.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண்.3770/2018/இ1** | **417** | **அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/சே.நாகராஜன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

**/உண்மை நகல்/**

திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்றக் கூடத்தில் 31–01–2019 வியாழக் கிழமை மாலை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.சே. நாகராஜன், எம்.ஏ.,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி–2019 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம். | **418** | **பதிவு செய்யப்பட்டது** |
| 2 | இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் அலுவலக பணிகள் மற்றும் மதிப்பீடுகள் தட்டச்சு செய்யவும், வெளிப்புற பணிகளான குடிநீர் பணிகள் மற்றும் பொறியியல் பணிகளை மேற்பார்வையிட போதிய பணியாட்கள் இல்லாததால் தினக்கூலி அடிப்படையில் 2 பணியாளர்களை திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.2984/2017/ஈ1 நாள் 06.06.2017–ந் தேதிய தினக்கூலி நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட உத்தரவின்படி நாளொன்றுக்கு ரூ.259/– (ரூபாய் இருநூற்று ஐம்பத்து ஒன்பது மட்டும்) கூலி என்ற அடிப்படையில் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமித்த இரண்டு பணியாளர்களின் காலக்கெடு முடிவடைந்த நிலையில் **01.02.2019** முதல் மேலும் ஓராண்டு காலம் நியமித்து கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்தினை (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 3530/ 2017/இ1** | **419** | **அனுமதிக்கப்பட்டது** |
| 3 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் வார்டு 6 வடபாதி ஆற்றங்கரை தெருவிலுள்ள மினி பவர் பம்ப் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு பேருந்து நிலையத்திலிருந்து செல்லும் குடிநீர் விநியோக குழாய் மிகவும் பழுதடைந்தும், அடைப்பும் ஏற்பட்டுள்ளதால் குடிநீர் விநியோக குழாய் மிகவும் பழுதடைந்தும், அடைப்பும் ஏற்பட்டுள்ளதால் குடிநீர் விநியோக குழாயினை புதிதாக மாற்ற வேண்டியுள்ளது. மேலும், வார்டு எண் 17 பூண்டுவெளிக்கு, சிங்களாந்தி சாலையிலிருந்து செல்லும் குடிநீர் குழாய் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதனையும் மாற்ற வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளை செய்வதற்கான மதிப்பீடு ரூ.685000/–க்கும் (ரூபாய் ஆறு | **420** | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) இப்பணிகளை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 212/ 2019/இ1** | | |
| 4 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தட்டாரத் தெரு, முத்துப்பேட்டை சாலை, அரியலூார், அபிஷேககட்டளை, பள்ளிவாசல் தெரு ஆகிய ஐந்து இடங்களில் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குளோரினேஷன் செய்யும் வசதி இல்லாததால் பொதுமக்களின் நலன் கருதியும், எதிர்வரும் கோடைக்காலத்தை கருத்தில்கொண்டும் சோடியம் ஹைபோகுளோரைடு டோசிங் சிஸ்டம் அமைக்க வேண்டியுள்ளது. ஒன்றின் உத்தேச விலை ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஆகும். 5 இடங்களில் அமைக்க தேவையான செலவினம் ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். இப்பணியை உடன் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 135/ 2019/இ1 | **421** | **அனுமதிக்கப்பட்டது** |
| 5 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரியினங்கள் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு அறிவிப்பு வாசகத்தை ஆட்டோ ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **422** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| வ.எ. | விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம் | ஒரு நாள் வாடகை ரூ. |
|---|---|---|
| **1.** | ஹரீஷ் பிரபு பப்ளிசிட்டி | **2400/–** |
| **2.** | அம்மன் விளம்பர நிறுவனம் | **2500/–** |
| **3.** | தேவா பப்ளிசிட்டி | **2300/–** |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு: (1) அனுமதி வழங்கலாம்.<br>(2) குறைவான விலைப்புள்ளி அளித்த தேவா பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.<br>(ந.க.எண்.122/2017/அ1) | | |
| 6 | திருத்துறைப்பூண்டி நகராட்சி பேருந்து நிலையத்தின் 'C' பிரிவு அங்கீகாரம் 4.11.2015 முதல் 3.11.2018 வரை மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அங்கீகார காலம் முடிவடைய உள்ளதால் பேருந்து நிலையத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. எனவே, பேருந்து நிலையத்தை புதுப்பிப்பதற்கான பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.2.25இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: (1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(2) பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன்கீழ் பணியினை மேற்கொள்ள இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2834/2018/இ1) | **423** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

ஒம்/சே.நாகராஜன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்